24—

காற்றாலைகள் மூலம் மின்சார உற்பத்தி

***37530—திரு. ச. ராமராஜ்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதி, ராசிங்கபுரம், சிலமலை கிராமப் பகுதிகளில் காற்றாலைகள் மூலம் மின்சார உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேனி மாவட்டம், ராசிங்கபுரம், சிலமலை கிராமப் பகுதிகளில் தனியார் நிறுவனங்கள் காற்றாலைகள் அமைக்க ஏற்பாடுகள் தொடங்கியுள்ளனர்.

திரு. ச. ராமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது போடிநாயக்கனூர் தொகுதியின் நீண்டகால கோரிக்கையை ஏற்று ஒப்புதல் அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த அரசுக்கும் எனது தொகுதியின் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழையே இல்லாத காலத்திலும்கூட தடையில்லா மின்சாரம் வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் காற்றாலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு, குறைந்த காற்றழுத்தம் உள்ள பகுதிகளிலும் காற்றாலைகள் அமைக்கின்றவிதமாக, நவீன காற்றாலைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படிப் புதிய காற்றாலைகள் அமைக்கின்ற கம்பெனிகள், அதில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தைத் தன்னுடைய நிறுவனத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதுபோக, மீதமுள்ள மின்சாரத்தைத் தனது சார்புடைய வேறு

2004 ஜூலை 27]

ஏதேனும் நிறுவனத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்பிருக்கிறதா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய சுய தேவைக்குப் போக, மீதமிருக்கின்ற மின்சாரத்தை third party sales, அதாவது, மற்றவர்களுக்கு விலைக்கு விற்க முடியுமா என்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். புதியதாக வந்த Central Electricity Act-ன்படி அந்தக் கருத்து அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 25, திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

25—

மாற்றுப்பாதை அமைத்தல்

***19854**—திரு. கு. பிச்சாண்டி:*

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை, அண்ணாமலையார் மலையைச் சுற்றிப் போக்குவரத்திற்கென மாற்றுப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 26, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.